பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பெரிய

மரண விளக்கம்

மனதைத் துலக்கும்.

இஃது

வள்ளல் நகரமாகிய

பள்ளப்பட்டியில்

வாசஞ்செய்திருந்த வேலங்குடி

ஹாஜியார் நூருமுஹம்மது ஸாஹிபு

மக்பூறு வ மருஹூமு அவர்கள் பிள்ளை

இராய வேலூரில் வாசஞ்செய்கிற

ஆ. மௌலானா மௌலவி வாயீஸ்

முஹம்மது இபுறுஹீம் ஸாஹிபு அவர்களால்

இயற்றப் பெற்று

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1948

[அணா 5.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
14 JUL 1948
3148
QT: 21
N48
13903

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பெரிய

மரண விளக்கம் மனதைத் துலக்கும்.

காப்பு.

அழிவிலா வல்லவனே யடங்கலை யமைத்தவனே
எல்லா மழித்தும்பின் னெழுப்புதல் செய்பவனே
என்னுளு மெங்கள் பிழை எல்லா மழிப்பவனே
மரணவிளக் கம்பாட மன்னவா நீ காப்புத்தானே.

இது முனாஜாத்து—மதனவி இராகம்.

அழிவில்லாத காயிமான ஹையனே
அழித்து எழுப்பி கேள்விகேட்கும் மெய்யனே. 1
ஸல்லிஸல்லிம் குல்லயெவ்மின் றப்பனா
ஸையதுஸ்ஸா தாத்துபேரில் ஹஸ்பனா. 2
இன்னமவரின் வீட்டு ஜனங்கள்பேரிலும்
இன்னமஸ்ஹாபான பெரியோர்பேரிலும். 3
இன்னமவரைத் தொடர்ந்தவர்கள் பேரிலும்
இன்னமற்று மன்பியாக்கள் பேரிலும். 4
சொல்லி ஸலவாத்தும் ஸலாமுமுன்னிடம்
சொல்லிகெஞ்சி கேட்கிறோம் செய்ஸம்மதம். 5
மூமினீன்கள் முஸ்லிமீன்கள் பாவங்கள்
முழுதுமழித்துசெய் ஸதாநீ லாபங்கள். 6
மௌத்துஹாலிலோதவை தௌஹீதை நீ
முடிகிடாமல் நீக்கிவை இபுலீஸைநீ. 7
இங்குமங்கும் கொன்பலத்தை கார்த்துநீ
எங்குஞ்சுகமே தந்து கிருபை செய்பிநீ. 8
இன்னம் ஸஹ்ஹில் ஹாலஸக் கருத்தின்லெனா
இன்னமற்று முதவியெல்லா மிய்லெனா. 9

1-வது உணர்ச்சி வருத்துதல். அதே இராகம்.

இந்த உலகில் வாழ்வுநிலையா அல்லவா
இந்த அப்யானில் தெரிந்து கொள்ளவா. 1
நகையு முதலுமிழந்து பிரியலாகுமே
நகாமிழந்து கபுறு பகரமாகுமே. 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1948

பெண்டுபிள்ளை சொந்தரை நீ பிரிகுவாய்
பின்புகாண மீண்டிடாம லாகுவாய். 3

வீடுவாசல் காடுதோட்டம் நீங்குமே
விரும்பிதிரும்பி வந்திடாமல்நேருமே. 4

பெண்டுபிள்ளை நேசராசை இங்குகாண்
பின்பு அவரோ டேதுகூட வேளைகாண். 5

ஆடுமாடு வாகனங்கள் நீங்குமே
ஆருமில்லா காடுபோக நேருமே. 6

எங்கும்போயி பின்புவருமோ மென்பமே
இறந்துபோயி வருவதுண்டோ சொல்லுமே. 7

இன்னபொருளும் சொத்துமுடைகள் வேண்டுமே
இன்னமின்ன கட்டிடங்கள் வேண்டுமே. 8

என்று நாட்டமிருந்த திழந்து சாவியே
என்று மீளா பயணமே என்னுவியே. 9

சேதமே யுன்மனதினு லாவதேதுமே
சேர்ந்துவருமுன் கபுறுசேர நேருமே. 10

இரவுபகலா வயதைவீணி லிழந்தியே
இறையோ னிடத்தி லென்ன சொல்வே தோஷியே. 11

கேலிசிரிப்பு லகுவு லகுபி லிருந்தியே
கேடுபிடிக்க வழிகளுனக்கு வருந்தியே. 12

எந்த விதமு மௌத்துபிடித்து போவெநீ
யேதுமுதவா தோஷியாக ஆவெநீ. 13

ஆகையாலிது நிலையிலாத லோகமே
ஆகிறம்தான் நிலைமக்கா மென்றோதுமே. 14

2-வது இதுவுமது. அதே இராகம்.

நிலவுபொழுது மாறுமாப்பு போலவே
நிலத்திலாண்டு மரணமடைந்தார் கேளுவே. 1

அன்பியாக்கள் முறுஸலீன்க ளெத்தனே
அன்பரான வொலிகளத்தா ரெத்தனே. 2

ஸாலிஹீன்கள் ஸாதிகீன்க ளெத்தனே
ஸாயிமீன்கள் ஸாபிரீன்க ளெத்தனே. 3

ஆலிமீன்க ளாபிதீன்க ளெத்தனே
ஆமிலீன்க ளாஷிகீன்க ளெத்தனே. 4

ஆரிபீன்க ளாபிலீன்க ளெத்தனே
ஹாக்கிமீன்க ளாதிலீன்க ளெத்தனே. 5

113903

தாரிக்குஷ் ஷஹ்வாத்தி னல்லோ ரெத்தனே
தாயிபீன்கள் தாஹிரீன்க ளெத்தனே. 6

இல்மு பதினு லோதினோர்க ளெத்தனே
இல்மு மொழுங்கு முடையவர்க ளெத்தனே. 7

தாரெதுனியா விழுந்து மாண்டா ரறியிதே
திரும்பி வருவா ரென்றிலாம லாச்சுதே. 8

சிறிதுபேரின் பேருமிடமு மறைந்ததே
சிறிதுபேரின் கபுறுக்குறியு மறைந்ததே. 9

இந்த உலகில் வாழ்வைநம்பி இருந்து நீ
இறையோனிடத்தில் துன்பத்திற் காகாதே நீ. 10

97:21 N48

3-வது இதுமவுது. அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்துகைருல் அன்பியா
ஸகலோக மவருக்கே படைத்தான்குதா. 1

அந்த நபியே போனபின்பு யாருகாண்
அந்திபகலு மெனக்குஸத மென்போருகாண். 2

நபிஷூஹைபு ஷீதுனூஹூமெங்கெகாண்
நம்மையீன்ற தாயிஹவ்வா வெங்கெகாண். 3

நபி ஸுலைமானிபுனு தாவூதெங்கெ காண்
நபி அபுல்பஷருன ஆதமெங்கே காண். 4

எங்கே மூஸா எங்கெயீஸா சொல்லுகாண்
எங்கே தாவூ தெங்கெஹாறா னெதுகாண். 5

எங்கே இப்றுஹீமு இஸ்மாயீ லுகாண்
எங்கே யஹ்கூப் யூஸுபுஇல் யாஸுகாண். 6

எங்கெ இத்ரீ ஸெங்கே அய்யூப் லூத்காண்
எங்கெ மற்றும் பாக்கி அன்பியாவுகாண். 7

நபிகளிஷ்ட ரருமைமக்க ளெங்கெ காண்
நமக்கு தீனைத் துலக்கித்தந்தோ ரெங்கெகாண். 8

இத்தனை சிதேவியும் மாண்டாரெகாண்
எத்தனைநா ளிங்குனக்கு வீவுகாண். 9

இந்த வுலகில் நல்ல அமலைத் தேடுகாண்
இறையோ னிடத்தில் மக்பிரத்தைக் கேளுகாண். 10

4-வது இதுமவுது. அதே இராகம்.

வருஷ மைந்நூறெங்கே பிறு அவ்ன் ஆண்டுகாண்
வழியில் நீலாற் நடுவிலே மாண்டானெ காண். 1

அவ்ஜனூ ஆயிரம் பாவஸிங்குகாண்
அவ்ஜஆண்டு வோரடியில் மாண்டெனகாண். 2

காறூனுசொத்தின் சமத்திறு லாண்டானெகாண்
காபிர் ஹறூமி மண் முழுங்கலானூனெ காண். 3

ஸத்தாது ஸதமாவாழ சொர்க்கம் கட்டிகாண்
ஸண்டாளன் விழுந்து செத்து மாண்டான் கேளுகாண். 4

ஆது கூட்ட மெந்தவகை லாச்சுகாண்
அறிந்து பயந்து நேர்வழியில் தங்குகாண். 5

லூத்து கூட்டமும் தமூதுகவுமு காண்
லஃனத்துல்லாவில் ஹலாக்காக போச்சு காண். 6

றப்பனே வல் தள்ளிமாறு செய்தெரெகாண்
றப்புகஹறும் கோபமு மடைந்தாரெகாண். 7

நீ குதாக்குமாறு செய்நீரெகாண்
நீண்டகாலம் நரகிலே வேகாத காண். 8

ஆரையும்நீர் துன்பஞ் செய்தீரெகாண்
ஆருமடையாப் பெரும்ஹலாக் கடையாதெகாண். 9

5-வது இதுவுமது. அதே இராகம்.

சிலர் சதமென் றிருந்த வாழ்வை யெண்ணியே
சொந்தநாயன் சொன்ன சொல்லைத் தள்ளியே. 1

ஏது கேள்வி செத்தபின்பென் றெண்ணியே
ஏக கருமம் பாவஞ்செய்ய எண்ணியே. 2

குரு துரோகஞ் செய்தவர் களெத்தனே
கடுங்குபாடஞ் செய்தவர்க ளெத்தனே. 3

அடுத்துப்பழகி குடிகெடுத்தோ ரெத்தனே
அடுத்துச் சேர்ந்து பறித்துப் பகைத்தோ ரெத்தனே. 4

எண்ணந் தீரமட்டுஞ் சேர்ந்திருந்தோ ரெத்தனே
எண்ணம் முடிந்தா லெதிர்த்துப் பகைத்தோ ரெத்தனே. 5

ஒண்டினோரைக் குடிகெடுத்தோ ரெத்தனே
ஒண்டுசொல்லி மண்டகித்தோ ரெத்தனே. 6

களவுமோசஞ் செய்து பிழைத்தோ ரெத்தனே
கடனைக் கொடுக்கா கடுங்குபாட ரெத்தனே. 7

புருஷனிருக்க பிறரைப்புணர்ந்தோ ரெத்தனே
பிறரைப் புணர்ந்து பெண்டிழந்தோ ரெத்தனே. 8

வேஸீதனத்தில் வயதிழந்தோ ரெத்தனே
வாஃஸியில்லா நோயிலானோ ரெத்தனே. 9

அல்லும்பகலும் பொருளைக்காத்தோ ரெத்தனே
அறவே ஈயா லுத்தரின ரெத்தனே. 10

பொய்யை மெய்யா இட்டுக்கட்டி யெத்தனே
போக்கிரி களாகி கெட்டோ ரெத்தனே. 11

தொழிலுவட்டி வாங்கிக்கெட்டோ ரெத்தனே
தொழுகைநோன்பை விட்டுக்கெட்டோ ரெத்தனே. 12

பொய்சாட்சி சத்தியம் செய்பவர்க ளெத்தனே
பூமியிலேற்பட்டு கெட்டோ ரெத்தனே. 13

கள்ளு சாராயம் குடிப்போ ரெத்தனே
கர்த தனைவலைத் தள்ளி நடப்போ ரெத்தனே. 14

தந்தை தாயை நோகவைத்தோ ரெத்தனே
தன்பிறந்தோ ரைப்பகைத்தோ ரெத்தனே. 15

சொந்தபந்தை வெறுக்கடித்தோ ரெத்தனே
சுகங்கொடுத்தோ ரோடெதிர்த்தோ ரெத்தனே. 16

ருணத்துரோகி குருத்துரோகி ரெத்தனே
ருணங்கொடுத்தோரை வதைத்தோ ரெத்தனே. 17

கூட்டிக்கொடுத்துக் கூலிவாங்கி யெத்தனே
கொடுமை லஞ்சம் வாங்கித்தின்றோ ரெத்தனே. 18

எதிரிவாழ கண்டு வெடிப்போ ரெத்தனே
எரிந்த தீயை யெதிர் பார்ப்போ ரெத்தனே. 19

ஆலிமோடு ஹஸதுவைப்போ ரெத்தனே
ஆழநரகில் போறவர்க ளெத்தனே. 20

சூதுஆடி காசுதேடி யெத்தனே
சொர்க்கமிழந்து நரகிலாவோ ரெத்தனே. 21

கூடுபஞ்சாக் கள்வணங்கி யெத்தனே
கொடிபடம் தாபூத்தை வணங்கி யெத்தனே. 22

இன்ன மிவைகள்போலப் பாவ மெத்தனே
இந்தலோகில் செய்துகொடுவோ ரெத்தனே. 23

இந்த விதமா யுள்ள மனுஷா ளெத்தனே
இந்தவுலகி லிருந்துமடிந்தா ரெத்தனே. 24

நரகமிவரைப் போலவர்க்கே நேசனே
நாயன் படைத்தான் பயந்துகொள்நீ வாசனே. 25

லக்ஷவருஷ மிருந்துமொருநாள் சாவெநீ
லகிலைத்துல்லா வாகிடாமல் பேணுநீ. 26

6-வது இதுவுமது. அதே இராகம்.

மூச்சைவிட்டு மூச்சிழுக்கு முன்னமே
மௌத்துமலக்கு பிடிக்கப்பட்டோ ரெத்தனே. 1

பேச்சுப்பேசி பேச்செடுக்கு முன்னமே
பிடித்துமலக்குல் மௌத்து செத்தோ ரெத்தனே. 2

படுத்துறங்கி யெழுந்திடாமல் நேசனே
படுக்கைதனிலே மௌத்தடைந்தோ ரெத்தனே. 3

அடியெடுத்து வைக்குமுன்னே நேசனே
அடுத்துமௌத்து பிடிக்கப்பட்டோ ரெத்தனே. 4

சிமிட்டி கண்ணைச் சிமிட்டு முன்னே நேசனே
செத்தவர்க ளிந்தவுலகி லெத்தனே. 5

கேற்றிருந்து இன்றிறந்தோ ரெத்தனே
நெருப்பிலெரிந்து கரிகிசெத்தோ ரெத்தனே. 6

கவிழ்ந்துகப்ப லிறந்தவர்க ளெத்தனே
கயற்றைக்கழுத்தில் மாட்டிச்செத்தோ ரெத்தனே. 7

ஒத்தஸஜதா செய்மாறு ஸஜதா முன்னே
உற்றவுயிரை விட்டுசெத்தோ ரெத்தனே. 8

நிலைமுக்கூஹா இருப்பிலிருந்தோ ரெத்தனே
நஞ்சுதின்று வெறுத்துச்செத்தோ ரெத்தனே. 9

விஷவியாதி பேதியிலிறந்தோ ரெத்தனே
விஷங்கடி தாஊனுலிறந்தோ ரெத்தனே. 10

ஆகையினுலிது நிலையில்லாத வாழ்வுகாண்
ஆகிறம்தா னிலைக்காமென் றேதுகாண். 11

இந்தவுலகம் யாருக்கும் சதமில்லையே
இங்கேயாரும் நிகழவாழ்ந்தோ ரில்லையே. 12

இதுவை நம்பி யிருந்தவர்க்கு நாசமே
இதிலும் வழி கேடாயிப்போனல் மோசமே. 13

ஆகிறத்தை நம்பினோர்க்கு வாசமே
அங்கெயுதவும் நன்மைஇங்கே தேடுமே. 14

எந்தவிதமும் மிதிலுமாகா திறந்து நீ
இந்த வுலகை விட்டுப்பிரிந்து போறே நீ. 15

ஆகையாலே தேடுநல்ல செய்கை நீ
ஆகிறத்தில் மோக்ஷம் பெறுவே கேளு நீ. 16

7-வது இதுவுமது. அதே இராகம்.

என்னசெய்வோ மிஷ்டரே கைசேதமே
எந்தவிதமும் மௌத்துபிடித்தே தீருமே. 1

பிறந்திடாமே நாமிருக்க வேண்டுமே
பிறந்ததாலே மௌத்து சேர்ந்துகொள்ளுமே. 2

நாயனுட்டம்போலே அதுவே முடிந்தது
நன்றுசெய்யி தீங்கைநீக்கு விதியது. 3

மக்கமனுஷா ளருமையில் றஹ்மானே நீ
மறந்திடாதே செய்கிறுபை மிகுதி நீ. 4

மௌத்துவருத்த மூந்தன்பேரி லாகையில்
மக்கமனுஷா ளுதவியேது பாரதில். 5

அந்தவேளை தாய்தகப்ப ரெங்கெயோ
அண்ணன் தங்கை மக்கமனுஷா ளெங்கெயோ. 6

தம்பிதமக்கை சொந்தநேச ரெங்கெயோ
தாதி தாதா நானிநானு வெங்கெயோ. 7

சிறியபெரிய தந்தைபாட்டி யெங்கெயோ
சிறியபெரிய மாமுகாலா வெங்கெயோ. 8

பெண்டுபிள்ளை பேரரெல்லா மெங்கெயோ
பிறியமறுமைக்கார ரெல்லா மெங்கெயோ. 9

புருஷனும் மற்றுமுறவா ரெங்கெயோ
பெருமைப்பொருளு மருமை நகையு மெங்கெயோ. 10

எந்தபொருளு மந்தவேளை நேசரே
இடையிலுதவி செய்திடாது நீதரே. 11

காசுபணங்க ளந்தவேளை யெங்கெயோ
காடுவாசல் வீடுதோட்ட மெங்கெயோ. 12

ஆசைவைத்து சேர்ந்தபொருளு மெங்கெயோ
ஆடுமாடு வாகனங்க ளெங்கெயோ. 13

நாடுநகர மானியங்க ளெங்கெயோ
நம்மளடுக்க ஊழியாள ரெங்கெயோ. 14

நாமள்செய்த நன்மைதவிர ஏதுமே
நமக்கு அந்தவேளை யுதவா தோதுமே. 15

ஆகையாலே தேடுமெத்த நன்மையே
ஆகிறத்தி லுண்டுனக்கு ஷங்கெயே. 16

சென்றவயது சென்றதப்பா வீணிலே
செல்லவாற வயதைப்போக்கு தீனிலே. 17

8-வது இதுவுமது. பதம்.

மரணம்விடாது மலக்குல் மௌத்தென்னுமுன்னே
மறந்துவிடாது பலசமத்திருந்து பயணம்விடாது. 1

கல்லுனுட்டுளேச்செய்து தேரை போலிருந்தாலும்
கருங்கல்லுகோட்டைக்குள் மறவாயொளித்தாலும்
கடலும் திடலும் விட்டு கண்மாயமானாலும்
கணக்கற்ற மருந்தைநீ பொசித்துசெமித்தாலும். (மர) 2

கோடி மனுஷாளுக்குள் கூடிக்கொண்டிருந்தாலும்
கணக்கற்ற வரசர்கள் கைக்குள்ளிருந்தாலும்
உள்ளுரில் பேதிவந்தா லூருருக் கோடினாலும்
அல்லும் பகலும்தீனி அனுதினங் குறைத்தாலும். (மர) 3

எமனே பயந்துதினம் இருகண்ணே விழித்தாலும்
அறவே எழுந்துறக்கம் ஆந்தைபோலிருந்தாலும்
பெருத்த இருளிடத்தில் துரத்த எமன்வருகும்
பேடித்தனத்தினாலே பந்தம்பிடித்தாலும். (மர) 4

பேய்பிசாசைக்கண்டு பயந்தா லெமன்வருகும்
பயணம் தனியே சென்றால் பகையெதிரில் வரும்
இந்த நினைவுகொண்டு மாந்திரக்காரரிடம்
ஏதோ சரடுநூலை வாங்கி சுமந்தபோதும். (மர) 5

மூச்சை யடக்கிக்கொண்டு முக்கோடி வருஷமட்டும்
பேச்சை யடக்கிமலே பொதும்பி லிருந்துகொண்டும்
மனுஷனே விட்டொழிந்து மறவாய் திரிந்துகொண்டும்
எமன்வரவழி எங்கேயெனவே நினைத்தபோதும். (மர) 6

9-வது இதுவுமது. மதனவி இராகம்

அங்கெயுதவும் நலவை இங்கே தேடுகாண்
அங்கெ சொர்க்கம் சங்கைசுகத்தைச் சேருகாண். 1

நப்புநபியுஞ் சொன்னசொல்லைக் கேளுகாண்
றஹ்மத்துல்லாஹி தினம் நீ தேடுகாண். 2

மாறவர்க்குக் கொஞ்சமுஞ் செய்யாதெகாண்
மாறுசெய்து தோஸகை கொள்ளாதெகாண். 3

முன்னே மாறுசெய்து கெட்டோர் பாடுகாண்
மூத்து உலமாநாவு சொல்லக் கேளுகாண் 4

பாவமறவே செய்திடாதே பேணுகாண்
பேணுகாணும் பேணுகாணும் பேணுகாண். 5

பாவமேது மானமேது சொல்லுகாண்
பறத்த மழுகை விசனத்தோடே யோதுகாண். 6

இந்தவெந்தன் பாவத்தைநீ ஐகபூர்
இரக்கஞ்செய்து பொறுக்கவேணும் நீ ஐரூர். 7

செய்து தவுபா விட்ட பிழையைப் பின்புகாண்
செய்திடாமல் பேணுபின்பு வம்புகாண். 8

செய்திடாமலிப்ப தவுபா சாவிலே
செய்யலாமென் போரு வீடு ஞருலே. 9

அஞ்சிவேளைதொழுது மிஸ்திருபாரை நீ
அஞ்சி கொஞ்சியோதி கேளுரப்பைநீ. 10

நித்தமோது இந்த இஸ்திக்கு பாரைநீ
நிகூஷபம்நீ சுத்தம்பெறுவே பாருநீ. 11

அஸ்தக்பிருல்லாஹில்லதீ லாஇலாஹ இல்லாஹூவல் ஹைறயுல்கையூம் வஅத்தாபு இலைஹி, நபிகள் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் ஸக்ரூத்துஹாலை விசனிக்குதல்.

அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்திகைருல் அன்பியா
சொல்லீ ஸக்ரூத் தாஹூவென்று மிகுதியா. 1

ஆத்து ஆத்து மௌத்தெ மௌத்தெ யென்பவர்
அழுது அழுது தினமும் பெருமூச்சிவிட்டவர். 2

சொலித்து அழுகை நீரைசொந்து தன்மனம்
சொல்லுவார்களும்மத்திற்கு அனுதினம். 3

உம்மத்தா! ஸக்ரூத்துஹாலை நினையுங்கள்
உலகவாழ்விற் வயதிழக்கா திரியுங்கள். 4

ஹிம்மத்தா யீமானைக்கார்த்து வையுங்கள்
இஜ்ஜத்தா இஸ்லாமைமடந்துகொள்ளுங்கள். 5

துஷ்டதனத்தை வெறுத்துத் தீனைப் பிடியுங்கள்
துன்பமௌத்தி வனுகிடாது பணியுங்கள். 6

ஆரையும் ஸக்ரூத்து விட்டதல்லகாண்
ஆருக்குமப் போதுஹைறு லுண்டுகாண். 7

மௌத்துஹாலை ஆதம் ஸபியுல்லாநிதம்
மெத்தநொந்து சொல்லுவாரா மனுதினம். 8

என்னசெய்வே னென்னை மௌத்து பிடிக்குமே
என்ன யேலும் தாங்கமுடியா கஷ்டமே. 9

ஷீதுநபியின் செய்தி என்ன சொல்ல நான்
செழிப்புமேது சிரிப்புமேது அழுகைதான். 10

சொல்லிக்கொண்டே வாஹ்ஸக்ருத்தாகவே
செல்லவைத்தார் வயதை ஷீதுஸாஹிபே. 11

நூஹுநித்தம் மௌத்து ஸக்ருத்தெண்ணியே
நொந்துமெத்த வடிக்குவார்கண் தண்ணியே. 12

நினைத்து மௌத்தை எந்நாளும் ஸக்ரியா
நனையதாடி அழுகுவார்கள் மிகுதியா. 13

ஸக்ரி மகனுரான யஹ்யா சேதிநான்
சற்று மெழுதக்கூடுமா என்றுலேகாண். 14

நினைத்து மௌத்தை அழுது சப்தமிடுகுவார்
நனையஜூப்பா அழுகைநீரை வடிக்குவார். 15

கதறி அழுது சிறிதுவேளை மயங்கியே
கஷ்ட மௌத்தை நினைத்து பதறி நடுங்கியே. 16

காடோ செடியோ மலையோ புதரோ தேடியே
கண்ணு முகமும் அழுது அழுது வீங்கியே. 17

போயிசிலநாள் சென்று வருவார் வாடியே
பின்னு மௌத்தை நினைத்துப்போவா ரோடியே. 18

நினைத்து இப்ருஹீமு ஸக்ருத்தை தினம்
நொந்து அழுது புலம்புவார்க ளனுதினம். 19

மௌத்து கஷ்டம்போலெ கஷ்டமுண்டுமா
மௌத்தை விட்டும் தப்பித்தோரைக் கண்டமா. 20

என்னசெய்வே னென்னசெய்வேன் னென்றேங்குவார்
என்றுசொல்லி அழுவார்கள் ஸார் ஸார். 21

அழுகைநீரு தாடிநினைத்து வடியுமாம்
அழுகிற் கடந்த தாடி இப்ருஹீமுக்காம். 22

இன்னமற்ற அன்பியாக்கள் ஹாலைநான்
என்ன இந்த சிறுகித்தாபி லெழுதகாண். 23

நபிகளிந்த ஹாலிலான போதுநீ
நம்பிதுனியா யிழந்திடாதே நினைநீ. 24

ஒலிகள் றஹ்மத்துல்லாஹி அலைஹி

ஸக்ருதது ஹாலை விசனிக்குதல்.

அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்திகைருல் அவுலியா
ஸையதுல் அக்தாபி கைருல் அஸ்பியா. 1

குத்துபு அக்தாபான அப்துல்காதிறு
கதறி அழுவார் மௌத்தை நினைத்து ஜாக்கிரு. 2

அழுது யாஹூவென்று மூச்சை விடுகுவார்
ஆஹ் ஸக்ரூத்தாஹூவென்றே அழுகுவார். 3

ராவுபகலும் மிந்தவிசன ஹாலுமே
ராஜ ரிழந்தா ருயிரை யிந்த பாரிலே. 4

பாயெஸீது ஹஸனு இப்றுஹீமுக்கும்
பாஹனீபா ஸூபி கஸ்ஸாலியுக்கும். 5

அல்லும்பகலு மழுகையேதான் னிருந்தது
அடுத்து அடுத்து மௌத்து நினைவே கடந்தது. 6

மாலிக்கு ஹம்பல் இமாமு ஷாபியி
மாணிக்கம் அப்துல் வஹ்ஹாபு யாபியி. 7

கைருல் அக்தாபி யிமாமு ஷாதிலி
கைருல் அஸ்பியாயி குல்பக்காவொலி 8

அழுகுவார்க ளெண்ணி மௌத்தை ஸார் ஸார்
அலறுவார்க ளெண்ணி மௌத்தை சிறிதுபார். 9

ஹஜ்ரத்து ஷாஹூல் ஹமீது அதனமா
அழுகுவார்க ளெண்ணி மௌத்தை மிகுதமா. 10

பாக்கிவொலிகள் பாடுமிந்த பாடுதாண்
பாருமிங்கே மௌத்திழந்தோ ராருகாண். 11

சொல்லமெத்த அவுலியாக்கள் ஹாலைநான்
சின்ன புஸ்தகமே யிதுதா ளாதுகாண். 12

போயிக்கேளு ஆலிமீன்கள் சொல்ல நீ
போதனையில் போயிடாதே கேளுநீ. 13

அவுலியாக்கள் பாடுயிது வொன்ருச்சுகாண்
ஹாலுவுந்த னென்னகொஞ்சம் யோசிகாண். 14

ஸக்கருத்து விபரம்.

அதே இராகம்.

மௌத்து வருத்தம் துன்பத்தை நீர் கேளுகாண்
மிகுந்த வருத்தம் சஞ்சலம் கைசேதமே. 1

எலும்பு நரம்பு நொறுங்கி யறுந்து போகுங்காண்
என்னயேலும் நம்மளால் கைசேதமே. 2

எலந்தைமுள்ளில் மெலிந்ததுணியைப் போட்டுகாண்
எடுக்க இழுக்கும் போலயாம் கைசேதமே. 3

அறுத்தகோழி துடிக்கும்போலே ஹாலுகாண்
அதனமதிலும் துடிக்கலாகும் கைசேதமே. 4

கோழிபிடித்து சாரு பிழியும் போலகாண்
கர்த்தன் மலக்கு பிழியுவார்கள் கைசேதமே. 5

பாக்கு மரத்தை பாழமாக்கும் போலெகாண்
பாளமாக்கப் படுமுடல் கைசேதமே. 6

புலிகள் நரிகள் கிழித்தபோதிலும் லேசுகாண்
பொறுக்க முடியா வருத்தமவுத்து கைசேதமே. 7

பெருத்த நெருப்பிலெரிந்து வெடிப்பதுலேசுகாண்
பொறுக்கமுடியா துயரமே கைசேதமே. 8

வெட்டி தூளு செய்வதுமது லேசுகாண்
விட்டுப்போக வருத்தமே கைசேதமே. 9

தட்டி நொறுக்கி தீயிலெரிப்பது லேசுகாண்
தட்ட பேலா கஷ்டமே கைசேதமே. 10

செக்கிலாட்டிக் கொள்வதுமது லேசுகாண்
செக்கிலாட்டப் படுமுடல் கைசேதமே. 11

கதற கதற சதைவகுக்கும் போலெகாண்
கதறமலக்கு வதைக்குவார்கள் கைசேதமே. 12

சாகுமுன்னே கண்ணு னூறும் பாருகாண்
சஞ்சலங்கள் மிகுதமே கைசேதமே. 13

நாவடைத்து திட்டுமுட்டாய் மூச்சுகாண்
நட்டமுழிகளாகுமே கைசேதமே, 14

பட்டு பட்டு யென்று மொழிகள் விட்டுகாண்
புட்டுபட்டு போகுமே கைசேதமே. 15

கோடி ஜனங்களிருந்து லாபமென்னகாண்
கேடுதட்டி உதவிடார்கள் கைசேதமே. 16

பின்பு கொள்வாருயிரை மலக்குல் மௌத்துகாண்
பிரியு மிந்த இன்ப துன்பங் கைசேதமே. 17

கத்திபேசி கொண்டிருந்த வாயிகாண்
கத்திடாமல் மூடுமே கைசேதமே. 18

கடந்த வேலை செய்திருந்த கையிகாண்
கிடந்து சோம்பி தூங்குமே கைசேதமே. 19

நடக்க மடக்க வோடிதிரிந்த காலுகாண்
நீட்டு வைத்து தூங்குமே கைசேதமே. 20

எண்ணுமெத்த சுகமடைந்த கூடுகாண்
இன்று மண்ணில் தூங்குமே கைசேதமே. 21

வெந்து நொந்து நாறவேலை யாச்சுகாண்
வந்து வாழ்வ தேதினி கைசேதமே. 22

இங்குதினு மூன்றுவேளை யுண்டுகாண்
இனிஇல்லாம லாகுமே கைதேசமே. 23

நல்லவர்க்கு நிஹமத்தெங்கு மூண்டுகாண்
நல்லமௌத்து மவருக்கே சந்தோஷமே. 24

பிறந்தமிங்கே பிறப்பித்தோனை வணங்குகாண்
பிறந்துவணங்கா பாவமே கைசேதமே. 25

இந்தவுலகின் வாழ்வு கனவைப்போலெகாண்
இதுவே நம்பி இருந்தவர்க்கு கைசேதமே. 26

அழகு வயதை வீணில் செலவு செய்துகாண்
அங்கேமோசம் பெறுவெயே கைசேதமே. 27

கடந்தகால மாண்டுமொரு ளுளிறந்துகாண்
கிடந்து கபறில் துழறுவே கைசேதமே. 28

ஆகையாலே செய்யினல்ல செய்கை காண்
ஆகிரத்தி லுண்டுனக்கு வாஸமே. 29

லேஸுமாகும் மௌத்து கஷ்டம் கேளுகாண்
லாயிலாஹ இல்லல்லாஹு வோதுமே. 30

மவுத்திலொரு மலக்குச் சொல்வது

அதே இராகம்

உயிரைமலக்குபற்று மூன்னொரு மலக்குகாண்
உனக்கு சொல்லும் செய்திகேள் கைசேதமே. 1

இந்நாளு வரையிலாண்டு இப்பகாண்
இறந்துபோகப் போகிறுயே கைசேதமே. 2

இந்தத் துனியாவுக்குத் தேடிவைத்தெதகாண்
இந்தவேளை யுதவாத கைசேதமே. 3

கொஞ்சம்நாளைக்காக வயதை யிழந்தீருகாண்
கெஞ்சினுலும் மீள்வதில்லை கைசேதமே. 4

இந்தவுலகி னுசையில் வணங்காமேகாண்
இருந்து வழிகேடானியே கைசேதமே. 5

மௌத்துசெய்தி பக்கமென்ற சொல்லைகாண்
மனதிலெண்ணி நொந்தியா கைசேதமே. 6

மௌத்தின் பிறகு வீடுதனக்கே தென்றுகாண்
மௌத்துஹாலி லறிவியே கைசேதமே 7

இல்லை நல்லோர் பேரிலேதும் தொல்லைகாண்
இல்லைதுன்ப மவருபேரிலேதுமே. 8

துய்தானவர்கள் சகாகொஞ்ச முன்காண்
தனக்கு சொர்க்கம் காண்குவார் சந்தோஷமே. 9
துய்யசெய்கை செய்திருந்தா லின்னுங்காண்
துய்யசொர்க்கம் காண்குவே சந்தோஷமே. 10

வயதை வீணிலிழந்துகெட்ட பாவிகாண்
வாழ்நரகம் காண்குவான் கைசேதமே. 11
நாளுந்தோறும் நன்மைசெய்ய மறக்காதேகாண்
நாளைவாழ நரகமே தேடாதேகாண். 12

மவுத்து ஹாலில் இபுலீஸ்வந்து ஏமாற்றுதல்.

மௌத்தாகும்போது தாகமென்னு சொல்லநான்
மனதுவைத்து கேளுமிந்த கஷ்டமே. 1
சகலகடலின் நீரைக் குடித்தபோதிலும்
சற்றுமடங்கா தாகமே கைசேதமே. 2

அந்தவேளை வந்து இபு லீஸு தான்
அடுத்துவந்தே மாற்றுவான் கைசேதமே. 3
உனக்கும் பழக்கவாழி லொருவர் போலவன்
உகந்து வேஸ மெடுக்குவான் கைசேதமே. 4

நிறைந்தபெருப்ப மான தண்ணீர் பாத்திரம்
நேரிலுனக்கு வைத்துச் சொல்வான் கைசேதமே. 5
என்ன கஷ்டம் துன்பமுன்னைத் தொட்டது
என்ன நோயி லாகினாய் கைசேதமே: 6

கெட்டவர்கள் சொல்லுவாரா மிஷ்டனே
குடிக்க இந்தத் தண்ணீருதா கைசேதமே. 7
சொல்லுவானு மிந்தநீ ருனக்காகநான்
சொந்தமாகக் கொண்டுவந்தேன் நேசனே. 8

தீனைவிட்டு இருகுதா வென்றென்று சொல்
தீனமொதிங்கி தெளிவெநீ சந்தோஷமே. 9
உலகம்படைத்தோ னில்லையென்றும் சொல்லுநீ
உனக்குத்தாகந் தீர்க்குறேன் சந்தோஷமே, 10

அஹ்மதுக்கு இல்லைநபுவத் தென்றுசொல்
அகத்திய சொல் நீழிதாறேன் நேசனே. 11
கெட்டவர்க ளமையுவார்கள் இபுலீஸுக்கு
கெடுத்து ஈமானிரும் பிய்யான் கைசேதமே. 12

உடைத்துநீரு பாத்திரத்தைப் போக்குவான்
உடனே ஈமானுயிரும்போகும் கைசேதமே. 13

இதுவுமுடனே இன்னமிருந்த விதத்திலே
ஏகக்கெடுதல் செய்குவான் கைசேதமே. 14

நல்லவர்க ளகப்படார்கள் இபுலீஸுக்கு
நாடிவாற தேதவன் சந்தோஷமே 15

நல்லவழியே தேடுநீ யெக்காலமும்
நல்லமௌத்து மோக்ஷமடைவி ரெங்கெயும். 16

றூஹு உடலுக்குச் சொல்லுதல்.

அதே இராகம்.

றூஹு உடலை விட்டுப்பிரியும் போதுகாண்
றூஹதற்கு சொல்வதை நீர் கேளுகாண். 1

உடலே உன்னிலிருந்து இதுநாள் வரையிலு
மொழிந்ததுன்னை விட்டுமலக்குல் மௌத்திடம். 2

செய்கையெல்லாம் கெட்டதேனீ செய்தியே
சேதத்தில் வயதைநீ செலவு செய்தியே. 3

லஹ்வுலஹ்பில் வயதிழந்து செத்தியே
லஹூனத்துல்லாவென்று நீபேர் பெத்தியே. 4

வாழ்வு துனியா வாசமென்று வாழ்ந்தியே
வாழ்வுயெல்லா மிழந்துயிப்போ தாழ்ந்தியே. 5

நல்ல அமலை செய்துநீ வாழாமெயே
நஞ்சு திண்ட மீனுவமை யானியே 6

வயதை வீணி லாக்கவேண்டா மென்று நான்
வயதில்லா மோதியும் மறந்தாயெகாண். 7

இன்றையோடு செய்கையெல்லாம் முடிந்தது
இந்தலோக முன்னைவிட்டுப் பிரிந்தது. 8

நன்மை யொன்னில் லிருக்குமானால் வாஸமே
நாளை சொர்க்க முண்டுமக்கு பாருமே. 9

தின்மையானால் துன்பமேதான் மோசமே
தீங்கு தோஸக் காகுமே கைசேதமே. 10

இந்த ஹாலை சொல்லிறூஹு நீங்குமே
இந்தலோக மெண்ணுமோஸம் பண்ணுமே. 11

றூஹு போனபின் ஜனங்கள் அழுவதை மையத்து கேட்டுத் தேருதல் சொல்வது.

றஹ்மான் கண்ணி இராகம்.

சுத்தியுள்ள பேர்களே சூழந்தெனக் கழுகாதீர்
சுத்தனேவல் வந்தெனக்குஞ் செத்தொழிந்தே னழுகாதீர். 1

இன்ன மிருப்பேனென்று எண்ணம் மிகைத்திருந்தேன்
எண்ணமழிந்து இப்போ திறந்தேனழுகாதிர். 2

அல்லும் பகல்வயதை அநியாயத்தில் இழந்தேன்
அங்கெயென்ன சொல்வேனென்றாண்டுபோறே னழுகாதீர். 3

என்னென்ன வெண்ணமெல்லா மேகமா யெண்ணியிருந்தேன்
எண்ணமேதும் முடியாம லிறந்தே னழுகாதீர். 4

வீடுவாசல் மக்களாசை விரும்பிநித்தம் உகந்திருந்தேன்
வீடுமற்றதும் மிழந்து வீணானே னழுகாதீர். 5

இன்னும் சற்று வயதிருந்தா லென்னென்னா வேலை செய்வேன்
பின்னெயின்னம் மீளாமல் பிரிந்தே னழுகாதீர். 6

என்சாவுக்கழுதா யேதுமக்கு லாபங்காண்
உன் சாவை நோட்டமிடு மென்சாவுக் கழுகாதீர். 7

மையத்து மக்களுக்குச் சொல்வது.

அதே இராகம்.

மக்களழுகும்போது மையத்தறிந்து சொல்லும்
ஹக்கனழைத்துப்போறேன் அழுகைனீர் வடியாதீர். 1

பெற்றேன் வளர்த்தேன் பிரியமுங்கள் பேரில் வைத்தேன்
செத்தே னிழந்துங்களைச் செல்வரே யழுகாதீர். 2

என்னாளும் செழிப்பா யிருக்க நீங்கள் கண்குளிர்ந்தீர்
இன்னாளி லென்னுயிரை எமன் பிடித்தா ரழுகாதீர். 3

அல்லாஹூ என்னாளும் ஆதரவு உங்களுக்கு
வல்லோனின் னேவலென்னை வெல்லாச் கழுகாதீர். 4

என்னீரல்துண்டே எத்திமானீர் இன்றோடு
பன்னீரு கண்ணீரு பதறிநொந் தழுகாதீர். 5

உங்க ளழுகையினா லங்கே யதாபடைவேன்
எங்குமெனக்குசுக மேற்றங்கேளுமழுகாதீர். 6

உங்கள் போலத் துக்கவாழி எங்குமிருக்குதிப்போ
எங்கெல் கலைவிர்களோ என்முன் னழுகாதீர். 7

இங்கிருக்கும்போதே என் முகத்தைப் பார்த்திடுங்கள்
இங்கே விட்டுப் போனபின்பு யேக்கங்கொண்டழுகாதீர். 8

வேளைமிகுதமாச்சு வீணாகநேரமாச்சு
ஏழையைக் குளிப்பாட்டி எடுங்கள் நொந்தழுகாதீர். 9

மையத்து தன் பந்துகளுக்குச் சொல்வது.

அதே இராகம்.

என்சொந்த பந்துக்களே யேனழுக வந்தீர்காண்
உஞ்சாவை நோட்டமிடு மெஞ்சாவுக் கழுகாதீர். 1

கூட்டமூட்டமுடனே குலாவிருந்த வுங்களைபான்
கோட்டமிடும் தனியானேன் நொந்தமனமழுகாதீர். 2

இன்ன முங்களோடு இருக்கெனக்கு ஆசைகள்தான்
என்னசெய்வே னெமதூதர் எனைப்பிடுத்தா ரழுகாதீர். 3

வணங்காம லிழுக்கேதன் வபதையெந்தன் வீணுக்லகாண்
சுணங்காம லெடுங்களென்னை சேர்ந்தருசூழ்ந் தழுகாதீர். 4

எப்போதும்பாவி எனைப்போலு மில்லையேகாண்
என்னகூடுமென்னால் என் சாவுக் கழுகாதீர். 5

இன்னமென்ன வேதனைக ளென்மேரி லேறுமோகாண்
இன்னமென்ன சின்னமோ சேர்ந்தெனக் கழுகாதீர். 6

நான்பிறந்து நான்வளர்ந்து நான்வாழ்ந்த வாழ்வையெல்லாம்
நான்கண்ட ஸொர்ப்பனமாய் நானறியே னழுகாதீர். 7

ஆராரிருந்தும் அநேக ருறவாடியும் நான்
ஆரும்துணை இல்லாமல் லானேனழுகாதீர். 8

இங்குநீங்ளெல்லா மெனக்குதவும் பந்துக்கள்தான்
அங்குநீங்களாரோ வறியே னழுகாதீர். 9

சொத்திருந்தபடியால் சூழ்ந்தழுக வந்தீர்காண்
செத்தே னிழுந்து சொத்தைச் சுத்தினின் றழுகாதீர். 10

எங்கெங்கோ ழேழைகளு மிங்குவந் தழுகிறீர்காண்
இங்குள்ளோ ரேந்துகொள்ள யேனெழுவ தழுகாதீர். 11

எனக்காக அழுவதினு லேதுமக்கு நன்மைகள்காண்
உமக்குள்ள சாவை உணர்ந்தழுதும் மறக்காதீர்காண். 12

இனிவேளையாச்சு தெனக்கிருக்க யேலாதுகாண்
எனைத்தூக்கிக் குளிப்பாட்டி எடும்குளிக்கு வழுகாதீர். 13

என்பாவமெல்லா மிறையவன் பொருத்திடகாண்
ஒத்தாசைவைத்து உகந்துகேளும் மழுகாதீர். 14

என்பாடுபோல இருக்குதுங்கள் பாடுகள் காண்
என்னாளு மின்னாளை எண்ணிருங்க ளழுகாதீர். 15

குளிப்பாட்டும்போது மையத்து சொல்வது.

மத்னவி இராகம்.

மையத்தெடுத்துமக்கள் மனுஷாள் கழுகையில்,
மைத்தமனுஷாள் சூழநின் றழுகையில். 1

அந்தவேளை மையத்தழுது சொல்லுதே
எந்தனுடலு நொந்தமீன்போ லாச்சுதே 2

உடலை மெதுவாய் தேயுமழுத்தாதீர்களே
உடலுமெந்தன் ஸக்தில்லாமலாச்சுதே. 3

கொதிக்க உடலில் நீரை வாராதீர்களே
கொதறிசதைகள் கரிகினுடல்போ லாச்சுதே. 4

அரைக்கப்போதா தாப்பைத் தேயாதீர்களே
அரைக்கிசெதுக்கி நொறிக்கினுடல்போ லாச்சுதே 5

எறும்பு சுளிக்கி யேற்வதெந்தன் னுடலிலே
எடைகள் பெருத்த யானைக்கனம்போ லாச்சுதே. 6

மிருதமென்னைப் பிரட்டி உருட்டாதீர்களே
மிருகிநெருப்பில் வெந்தஉடல் போலாச்சுதே. 7

மொரட்டுபொட்டு இழுப்புத்தேப்பு ஸஹிக்கனே
மடைக்கி சுருட்டி யிடிகள் பெத்துடலாச்சுதே. 8

தப்புத்திப்பென் றெடுக்கவைக்காதீர்களே
தப்பிஎடுத்த கண்டினுடலாய் போச்சுதே. 9

கபனே மிருதமிறுக்கி கட்டாதீர்களே
கரிக்கிவேக வைத்தஉடல்போ லாச்சுதே. 10

சொந்தமல்ல எனக்குமாத்திர மிந்தஹால்
சந்திக்குந்தான் உங்களையும் கட்டாயத்தால். 11

கபனிடும்போது மையத்து சொல்வது.

அதே இராகம்.

மையத்திற்குக் கபனை யுடுத்தும் போதது
மெத்தநொந்து சொல்லு மனங்கள் நோகுது. 1

சேதமேயென் மக்களே மனுஷாள்களே
செய்திசிலது சொல்கிறேன் ஹக்பாக்களே. 2

இன்ன இன்னாரோடு பேசவில்லையே
இனி வருகேனென்று சேரலாச்சுதே. 3

மக்களாசை மற்றஆசை நேசரே
மெத்தறிந்து செத்திடாம லாச்சுதே. 4

இன்ன இன்ன வேலைசெய்தே னில்லையே
இன்னமிருக்க வயதிராமல் லாச்சுதே. 5

இந்த வயதில் சாவுயேதென் றிருந்தேனே
இந்தகபனே இப்பவுடையா வாச்சுதே. 6

எனக்கும்பெரிய மூத்தவர்க ளிருக்கவே
எனக்கு மௌத்து வந்துபயண மாச்சுதே. 7

நல்ல அமல்க ளேதும்செய்தே னில்லையே
நாஸமோஸ மென்றலையில் ஆச்சுதே. 8

ஆசைதுனியா ஆவலடங்க வில்லையே
ஆசைதீர்க்க இனிவராம லாச்சுதே. 9

இன்றுயென்னைப் போலேயேழை யில்லையே
இன்றையோடு பேரு மறைய லாச்சுதே. 10

காலமெல்லா மெத்த சொத்தைச் சேர்த்தனே
கைரு கைராத்துச் செய்திடாமல் லாச்சுதே. 11

பொருளு சொத்தைவிட்டு உங்கள்பேரிலே
பறிக்கக் கொடுத்தேன் பாவிஹாலில் லாச்சுதே. 12

பெருமையருமை யுள்ள யெந்தன் மக்களே
பிரிந்துபோக வேளைவந்து வாச்சுதே. 13

இந்தவேளை பாருமெந்தன் ஸஹோதரே
இந்தநேர மினிவராமல் லாச்சுதே. 14

அழுகவேண்டாம் மக்களே கண்மணிகளே
அருமையறியா தப்புவழியு மாச்சுதே, 15

என்னையடக்கி ஸபருசெய்யுங்கள் மக்களே
என்னை மண்ணில் மறைக்க வேளையாச்சுதே. 16

தாயிதந்தை மற்றுமுள்ள நேஸரே
தாவிஎடுங்க ளென்னை வேளையாச்சுதே. 17

இந்தஉலகம் மொட்டிவழிகேடாக்குமே
இஜ்ஜத்தெல்லாம் போக்கி நரகில் சாய்க்குமே. 18

வெறுத்துதுனியா பெருத்துவணக்கம் செய்யுமே
விரும்பிதீனின் படிநடந்து வையுமே. 19

கபனைக் கட்டினபின் ஓர்மலக்குச் சொல்வது.

அதே இராகம்.

உடுத்துக்கபனை மையத்திற்குத் தீர்ந்தபின்
அடுத்துமலக்கு சொல்வதைநீ கூர்ந்துஸுன். 1

இந்த உலகின் வாழ்வு ஸதமென் றிருந்தியே
இந்தலோகம் விட்டுக் கபனைத்தெரிந்தியே. 2

மக்கள் மனுஷாளோடு கூடியிருந்தியே
மெத்த துக்கம் பெற்று கபனோ டொழிந்தியே. 3

வயதைவீணில் செலவுசெய்து செத்தநீ
வயிறை வளர்க்க வேலைநித்தம் செய்தநீ. 4

என்னமோசம் செய்து கபனில்லானெநீ
என்னமோசம் செய்து பயணமானெநீ. 5

மூந்திக்கேள்வி தொழுதியா வென்றாகுமே
மற்றதெல்லாம் பிந்திக்கேள்வி யாகுமே. 6

தொழுதியானீ நோன்பு றம்ஸான் வைத்தியா
தொழிலுவட்டி விட்டுநீங்கி பிழைத்தியா. 7

புரணிக்கோளை விட்டுநீங்கி பிரிந்தியா
பிறரைநோகப் பேசிடாமல் லிருந்தியா. 8

நம்மை யேதும் தேடிவைத்து செத்தியர்
நல்லவழியில் லிருந்துகாலங் கழித்தியா. 9

ஹுஹுமுபெற்றோ ரிடத்திலுகந்து சேர்ந்தியா
ஹுஹுமு அநியாயத்தை விட்டுப் பிரிந்தியா. 10

உந்தன் னஹமாலேது பாவமன்றியே
எந்தநலவு மெழுதப் படவேயில்லையே. 11

நல்ல அமலை செய்திருந்தா லின்றைக்கே
நல்ல மாராயம் வரும் ஷக்கன்றியே. 12

இன்று உன்னைப் போலதோஷி இல்லையே
இன்றுனக்கு நரகவீடே தொல்லையே. 13

நாசமோச மின்று தொட்ட துன்னையே
நன்றி யேதும் செய்திடாமல கெட்டியே. 14

கபறு ஹஷறு புல் ஸிறுத்து நாகிலே
கஷ்டமடைய வழிகள்தேடி போறியே. 15

சகலபேரும்மிந்த ஹாலை கேளுங்கள்
சஞ்சலத்தை வைத்துநன்மை தேடுங்கள். 16

வெளிப்புறப்படுகையில் மையத்து சொல்வது.

அதே இராகம்.

வீட்டுவெளியே மையத் தெடுக்கும் போதுகாண்
வெறுத்துநொந்து சொல்வதைநீர் கேளுகாண். 1

குடும்பத்தாரே மக்களேயென் மனிதரே
கொடுமைபிரிச்சல் வந்து நமக்குள்ளாச்சே, 2

வேதமுறைத்தபடி நடவாமல் போச்சுதே
வேதனைகட்டிடங் கொடுக்க லாச்சுதே. 3

அய்யோ அய்யோ பிருச்சலே கைசேதமே
அய்யொகையும் காலும்நடுங்க லாச்சுதே. 4

கூட்டுக்கிளியைப் பூனைபிடிக்கும்போலேயே
களைத்துப்பிடிக்கப் பட்டுப்பிரிய லாச்சுதே. 5

கூட்டமூட்டமிழந்து பிரிந்து போறேனே
கூடியிருக்க இனிவராம லாச்சுதே. 6

மலக்கு மௌத்து என்னைத்தேடி பிடித்ததே.
மறைந்து ஒழிக்கத் தோதில்லாமல லாச்சுதே. 7

துக்கமே என துக்கமே என்துக்கமே
துக்கமிகைத்து விட்டுப்பிரிய லாச்சுதே 8

இரவுபகலும் மங்களத்தோடிருந்தனே
இனிவராமல் விட்டுப்பிரிய லாச்சுதே 9

எந்தன் மக்கள் மனிதரே என் தோழரே
இந்தப்பிரிச்ச லிப்பவந்து லாச்சுதே. 10

இந்தப்பிரிச்சலிப்ப ஏதென்றிருந்தனே
இந்தவேளை பிரிந்துபோக லாச்சுதே. 11

அழுகையே என்னழுகையே என்னழுகையே
அழுதுமழுதும் பிரிவதேதா னாச்சுதே. 12

என்ன செய்வோ மானதாச்சு நேசரே
என்னை நீங்கள் சந்திப்ப தென்றாச்சுதே. 13

ஸபறுசெய்யுங்கள் அஸ்ஸலாமு அலைக்குமே
ஜல்திஎடுங்கள் வேளைமிகுத மாச்சுதே. 14

மையத்து தெருவிலானபின் ஓர் மலக்கு சொல்வது.

அதே இராகம்.

மையத்தெடுத்து கொண்டுவரையில் தெருவுக்கு
மலக்கிலொருவர் சொல்லுவாரா மதற்கு 1

இன்றையோடு பிள்ளைபெண்டை விட்டியா
இன்றுகபுறைத் தேடி பயண மாச்சுதா. 2

வீடுபொருளு சொந்தமெல்லா மொழிந்ததா
விரும்பு கபுறைத் தேடிப் போகலாச்சுதா. 3

இந்த ஸபறைப் போலஸபறு செய்தியா
இப்ப கபுறின் ஸபறுவந்துவாச்சுதா. 4

போறவழியே திரும்பி யொருநாள் வருவியா
போயிதிரும்பா பயணமுனக்கு மாச்சுதா. 5

நல்ல அமலைச் செய்து யேதும் சேர்த்தியா
நினைத்துத் திரும்பா கபுறுப்பயண மாச்சுதா. 6

றப்புநபியின் சொல்ப்படி நீ நடந்தியா
றெம்ப பயத்தின் நீட்டு ஸபறு வாச்சுதா. 7

பிறந்துவாழ்ந்து இறந்துஜல்தி போறியா
பெருத்த பயத்தின் தானம்போக லாச்சுதா. 8

கபறுகஷ்டம் ஹஷறுவருத்த மறிந்தியா
கபனையுடுத்து கபுரைச்சேர லாச்சுதா. 9

கபனைத்தவிர ஒன்றுமில்லை யென்றுணியா
கபறு வீட்டைத் தேடி பயண மாச்சுதா. 10

என்னசெய்வா அங்கேபோயி காலியா
என்னுமதுவே தானமாக வாச்சுதா. 11

அங்கெகைறு நல்லவருக்கென் றறிந்தியா
இங்கெயதெனீ அறிய மூன் சாக லாச்சுதா. 12

தொழுக வைக்கயில் மையத்துக்கு ஓர் மலக்கு சொல்வது.

இன்று இங்கே வந்துநீயும் சேர்ந்தியா
எண்ணும் திரும்பேனென்று எண்ணங் கொண்டியா 1

ஆட்டம்பாட்டம் மொடுங்கிஇங்கே வந்தியா
ஆசை நாட்டமிழந்து உயிரைத் தந்தியா. 2

கூட்டமூட்ட மக்களைநீ பிரிந்தியா
குடும்பத்தாசை விட்டுசு கமும் மிழந்தியா. 3

நன்றுயேதும் செய்துஇங்கே வந்தியா
நொம்பலம் துடராமலேதும் செய்தியா. 4

கபனிலுன்னைச் சுருட்டிதூக்க தந்தியா
கபறிலுதவ கைறுயேதும் செய்தியா. 5

கபறுஹாலைக் கேட்டுமனதில் தெரிந்தியா
கபுறை துனியாவில் நினைத்து கொந்தியா. 6

மலக்குறாமான் முன்கர் நக்கீறை யறிந்தியா
மலக்குமுன்கர் ஹாலை தெரிந்து பயந்தியா. 7

இன்றையோடு ஆனெநீ கபுருளியா
இங்கே யுந்தன் வீடுஆச்சு காலியா. 8

கைறுயேதும் செய்திடாமல் காலியா
கபறிலென்ன செய்யவேநீ பாவியா. 9

தீனிலுள்ளபடி நடந்து பெறந்தியா
தீனமொதுங்கி ஆவெ சொர்க்கவாழியா. 10

தீங்கு செய்து இறந்தியாகில் பாவியா
தீங்கு துன்பம் மிகுந்துபெறுவே ஞரியா. 11

அடக்கயில் மையத்து ஸலாம் சொல்வது.

யாகோத்துபா இராகம்.

ஸலாமுன் அலைக்கும்பென் குளிவரையில் வந்தவரே
ஸலாமுன் அலைக்கும் கபுறுள்ளென்னை வைத்தவரே. 1

ஸலாமுன் அலைகும் சந்திப்பீரெப்போ மென்கபுறே
ஸலாமுன் அலைக்கும் சொந்த பந்துமுற்ற நேசர்களே. 2

தனியாக கபறிலுள்ளே தனித்தெந்த வகையிருப்பேன்
தனித்திந்த இருளிலுள்ளே தங்கமென மொப்புகிறேன். 3

ஸலாமுன் அலைக்கும் கபறில் மூடிக்கொள்ளுகிறேன்
ஸலாமுன் அலைக்கு சொந்தபந்து நேசர்களே. 4

என்பேரு உங்களிடம் இன்றோடு மறையலாச்சு
இன்றோடு இந்தகப றெனக்காக வீடாச்சு. 5

ஸலாமுன் அலைக்கும் நான் மண்ணோடு சேர்ந்தாச்சு
ஸலாமுன் அலைக்கும் என்கபுறை மூடிடுங்கள். 6

எனக்குள்ள மக்களே நானின்றே உங்களிடம்
எத்திவிட்டு இந்த கபறெனக்காக வீடுதினம். 7

இன்றடக்க மானேன் ஏழியவர்க்கு கைறிடுங்கள்
என்பாவதைப் பொருக்க ஏந்திடுகள் கையிகளே. 8

மையத்தை மண்ணில் மறைத்தபின் கபறு மண்ணால் நிறையமுன் மையத்தில் றூஹூ நுழைவதும் றூமான் மலக்கு வந்து கேட்பதும்.

மதனவி இராகம்.

மலக்கு மௌத்து கொண்டுபோன றூஹூபின்
ஏடைக்கிகபுறுக் கனுப்பப்படுகும் கூர்ந்துஸூன். 1

மையத்து மண்ணில் மறைந்தபின் றூஹூதான்
மையத்தோடு வந்துசேரும் றூஹூதான். 2

மலக்குறூமானந்த உடனே வருகுவார்
மையத்தெழுப்பி இருக்கவைத்து மொழியுவார். 3

நன்மை தின்மை செய்ததெல்லா மெழுதுகாண்
நேரமிகுதி யாக்கிடாதே ஜல்திகாண். 4

சொல்லுமந்த மையத்து கைசேதமே
ஜல்தி எழுத இல்லைகடிதம் மையுமே. 5

என்னசெய்வே னில்லைகலமு மென்னிடம்
என்னசெய்வே னெவரு கொடுப்பா ரிரவலும். 6

சொல்லுவார்கள் கபனு துண்டொரு கடிதமே
ஸூஸ்திசெய்வ திந்த வேளை மோசமே. 7

கையில்கலிமா விரலிலொன்று கலமுகான்
கைறொ ஷர்றே செய்ததை நீ ரெழுதுகாண். 8

வாழினெச்சிமையை க்ஷணத்தி லெழுதுகாண்
வம்பு தும்பைப் பெற்றிடாமல் பேணுகாண். 9

அரண்டுமையத் தழுதுநடுங்கி துடிக்குமாம்
அழுதுகலிமா விரலைகலமாய்ப் பிடிக்குமாம். 10

வாயினெச்சில் கொண்டு எழுதும் கபனிலே
வாழ்ந்துசெய்த நன்மையெல்லாம் முழுதுமே. 11

எழுதிநன்மை தீர்ந்தபின்பு தின்மையே
எழுதறப்பை வணங்கித் தொழு தோதாமலே. 12

தூக்கித்தடியை யடிக்க ஓங்கிச் சொல்லுவார்
இனமையெல்லா மெழுதி மூடி நீ அய்ஹிமார். 13

மாறுதுனியாவில் ரூகாவுக்கு செய்கையில்
மார்க்கமொழிந்த றப்பை வெட்கித் தொதுங்கிடில். 14

இன்றயேது இந்த வெட்கம் தோஷிநீ
ஒன்றும்விடாமல் பாவத்தெல்லா மெழுதுநீ. 15

பதறிநடுங்கிப் பயந்து கெஞ்சி யழுகுமாம்
பகலுமிரவின் பாவமெல்லா மெழுதுமாம். 16

சொல்லுவார மெழுகி தீர்ந்த பின்பதை
சுருட்டிமடக்கி முத்திரைசெய் நீ அதை- 17

மொழியுமைபத் தென்ன செய்வேன் தூதரே
மொஹருசெய்ய முத்திரையு மில்லையே. 18

சொல்லுவாரா முந்தன்கையின் பெருவிரல்
சூழஉள்ளநகமே மொஹர் நீயறிந்தருள். 19

எழுதிமடித்துப் பெருவிரல் நகத் தாலது
எச்சிக்கொண்டு முடிக்கும் மொஹரு செய்தது. 20

வாங்கிகழுத்தில் மையத்திற்கு மாட்டியே
வழமைபோல மையத்தங்கே நீட்டியே. 21

வந்தவழியே போகுவாரா மறிதே
வணக்கமிகுதம் செய்துசேரு நலமிதே. 22

முன்கற் னக்கீர் மலக்குகள் வந்து கேட்பது.

அதே இராகம்.

கபறுமூடி தீர்ந்த பின்பு மலக்குகள்
கண்ணுநீல வர்ணமுள்ள பேருகள். 1

மையத்தின் தலைமாட்டுச் சுவரைக் கிழித்தவர்
மொட்டக் கடுத்த பயந்த முகத்தை யுடையவர். 2

இடபுறத்தில் மையத்தருகே நின்றவர்
இருத்திசவத்தை கேள்விகேட்பா ரறிந்துணர். 3

நானுமிவரும் முன்கற் னக்கீருகாண்
நாங்களுண்டு மென்றறிந் திருப்பீருகாண். 4

உன்னைப்படைத்து வளர்த்த றப்புயாருகாண்
உனக்குறப்பு விதித்த தீனு மேதுகாண். 5

உனக்குவந்த நபியுமாறு சொல்லிநீ
உனக்கு சொர்க்கம் கிடைக்கசொல்லி வெலலுநீ. 6

நீகொடுத்தா லிந்த மூன்று கேள்விக்கும்
நீதமான மறுமொழி என்றென்றைக்கும். 7

சொந்தவீடு சொர்க்கமென்றே ஆவியே
சுகங்கொடுக்கப்பட்ட அப்தா போவியே. 8
சஞ்சலங்க ளொன்றுமில்லை எங்குமே
சௌக்கியங்க ளுண்ணைசுற்றித் தங்குமே. 9
நல்லவர்கள் கொடுக்குவார்கள் நல்ஜவாப்
நல்லசொர்க்க மடையுவார்கள் பிஸ்ஸவாப் 10
நரகவீட்டைத் திறந்துகாட்டி மூடுவார்
நல்ஜவாபைக் கொடுத்திடாதோர் வீடுபார். 11
என்று சொல்லி சொர்க்கவாசல் திறந்தவர்
என்னுமடையும் சொர்க்கசுகத்தை என்றவர். 12
சூஸ்திரத்தில் மறைந்துவிடுவா ரறிந்திடும்
சொர்க்கசுகங்க ளென்று மிவரைத் தங்கிடும். 13
கெட்டவர்கள் பார்த்தவ்வாளை நடுங்குவார்
கேள்விக்கேதும் சொல்லிடாம லழுகுவார். 14
கத்தக்கத்த மெத்தக்கதற தோஷியை
குத்திமெத்த கொடுக்குவார்கள் பூஷையை 15
இந்த வகையே மூன்று கடவை செய்தவர்
இந்த மூன்று கேள்விகளையுங் கேட்டவர். 16
என்னமோசம் செய்துவந்தாய் இங்கெ நீ
இங்கைக்காக என்னதேடி வைத்த நீ. 17
என்றுசொல்லி சொர்க்கவாசல் திறக்குவார்
எழுந்து பார்க்க சொல்லிமூடிச் சொல்லுவார். 18
இந்தமூன்று கேள்விக்கும் சொன்னஜவாப்
இருந்ததுனக்கு இந்தவீடு ஐசுறுப். 19
என்று சொல்லி திறந்து நரகவாசலை
எரிந்துகருகு நினைந்து பித்தமாலதை. 20
என்று சொல்லி சூஸ்திரத்தில் மலக்குகள்
எழுந்துகபுறை விட்டுமறைவா ரறிந்துகொள் 21
உடனே நரகநெருப்புத் தேளும் பாம்புகள்
உகந்துநிறைந்து கொள்ளுமந்த கபறினுள் 22
இன்னமெத்த வண்டு அட்டை குளவிகள்
எண்ணித்தீரா விஷபிராணி வஸ்துக்கள். 23
கூட்டங்கூட்டமாக வந்து சேருமே
கோடி லெட்சம் இம்சைகள் செய்யுமே. 24

மையத்துச்செய்திருந்த அமல்களை மலக்குச்சொல்வது.

அதே இராகம்.

சொல்லும் கபறில் மையத்தின் அமல்களுகள்
சூழ்ந்து கபறில் மையத்தே சிலசெய்திகள். 1

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS 113903 67:21 N48

உன்சொத்தும் தோழரும் பிரிந்தார்களா
உதவயாருமுன்னுடன் இருந்தார்களா. 2

உன்னைத்தனியாய்ப் புதைத்துப் பிரிந்தா ரறிபிதே
உனக்குத்துணை யென் றிருந்தா ரறிபிதே. 3

இன்றுனக்கு எங்களொழிய துணைகளார்
இன்றுமென்றும் மெங்களாலே கூலிபார். 4

நீ ஹயாத்தில் செய்த நன்மை தின்மைகள்
நாங்களென்று அறிந்துகூடி இருந்துகொள். 5

நன்மை மிகுதம் செய்திருந்தா லின்றுநீ
நரகமொதுங்கி சொர்க்கம்பெறுவா யின்று நீ. 6

தின்மை மிகுதம் செய்திருந்தா லின்று நீ
தீங்குதுன்பம் மிகுதம் பெறவே தோஷினீ. 7

மூமினாகிய மையத்துக்கு கபறில் அல்லாஹுத் தஆலா தேறுதல் சொல்வது.

அதே இராகம்.

ஸாலிஹான மையத்தழுது கபறிலே
ஸலித்துசொல்லும் றப்பனுடை கபறிலே. 1

சேதமே கைசேதமே தனியானெனே
சேதிகேட்க யாரையும் நான்காணேனே. 2

றப்பனுநீ இந்தவேளையுதவி செய்
றஹமதெந்தன்பேரி லிறங்கி கிருபைசெய். 3

இந்த நாளுவரையி லுந்தன் கிருபையில்
இருந்து தனிக்க லாச்சுதிந்த கபறினில். 4

அந்தவுடனே ஸப்தமாகும் நேசனே
அழுக வேண்டாம் அருமையா னென்னடியனே. 5

உனக்கு உடலுமுயிரும் ஈமான் தந்தனே
உனக்குவாழ வய்துரிஸ்கை வகுத்தனே. 6

இன்னமுனக்கு மட்டில்லாத உதவிகள்
உன்னைக்கொண்டே ஆயிருக்கும் கூர்ந்துகொள். 7

இன்னுமென்றும மிகுதமுதவி செய்குவேன்
இன்பமான சொர்க்க சுகங்க ளீய்குவேன். 8

உன்னைப்பெற்ற தந்தைதாயைக் காணவும்
என்னை யுந்தன்பேரி லெழுவதாயிரம். 9

கிருபையாளனென்று எண்ணென்னடியனே
இரக்கமழுகை ஏனுனக்கென் நேசனே. 10

அழுகவேண்டா மீய்வனுக்கு பிந்திறேன்
அழிவில்லாத சுகங்ளென்னும் மிகுதினேன். 11

ஹூறுலீன்கள் உனக்குமிருதம் தருகுவேன்
ஊழியர்களின்னம் பணிக்கிக் கொடுக்குவேன். 12

அறுஷைக் குலுக்கும் உந்தன மூலைக ஸபுறுசெய்
அமரவைக்கும் நரகநெருப்பைப் பொறுமைசெய். 13
ஸொர்க்க வாஸலிந்த எடையில் கபறிலே
சுகத்தைக்கொடுக்க திறக்கப்படுமே நொடியிலே. 14

ஸொர்க்க சுகங்களெண்ணு மவரும் நேமமாய்
ஸொஸ்தமாகப் பெறுகுவாரே சேமமாய். 15
நல்ல அமலை செய்தவர்க்கே வாசமே
நரகவீடு கெட்டவர்க்கே மோசமே. 16

மஹ்ஷறின் விபரம்.

அதே இராகம்

நாளை மஹ்ஷற் ஹாலை என்ன சொல்ல நான்
நாமமெல்லா மிறந்துபோன பின்புகாண் 1
இன்னுமக்லூ காத்து மழிந்த பின்பு காண்
இன்ன மிரவுபகலு மழிந்து போயிகாண். 2

ஹக்தஆலா எழுப்புவா னெல்லோரையும்
ஹக்குனீதஞ் செலுத்த எல்லார் பேரிலும். 3
பொழுதையாக்கி வல்லையத்தின் னுயரத்தில்
பொறுக்கமுடியா வெயிலுஞ் சூடும் செய்ததில். 4

எரிக்கவைத்து மஹ்ஷருளி பேரிலே
இரைந்துகத்த வைக்குவான் மைதானிலே. 5
வெயிலின் காய்வில் பூமிகொதிக்கும் கேளுகாண்
வெந்து குமிளிபோட்ட கூழைப்போலேகாண். 6

மஹ்ஷருளி தலைவெடித்து மூளைகள்
முகத்து வழியே வடியுமப்போ தறிந்துகொள். 7
வெயிலினாலே வேர்த்து மூடலு முருகுமாம்
வெந்தமீன் போலாயி முகங்கள் கருகுமாம். 8

கத்தி அழுது அடிக்குவார்கள் தலைகளை
கதறியோடத் தேடுவார்கள் வழிகளை. 9
அறுஷின் னெதிரில் லழைக்கப் படுவா ரனைவரும்
அரண்டுபயந்து வருகமாட்டா ரெவர்களும். 10

அந்தவுடனே நரகவடத்தை யனுப்பியே
அடுத்தடுத்து சுழன் றுவந்து நெருங்கியே. 11
துரத்தியவரைச் சேர்க்க அறுஷின் னெதிரிலே
துய்யசமத்த விட்டுயேவல் நொடியிலே. 12

இரக்கமற்ற கொடுமையுடனே சூழ்ந்திடும்
ஏவலெல்லா முடியசெய்தே தீரந்திடும். 13

நபிகளெல்லா மழுகுவார்கள் நப்ஸியா
நப்ஸி நப்ஸி நப்ஸியென்று மிகுதியா. 14

மற்றவர்கள் பாடுதலையில் கைகளை
மெத்தஅடித்து முறித்து கையின் விரல்களை. 15
விதியே விதியே யென்று அழுவோ ரெத்தனே
விழுந்துபுரண்டு புலம்பியழுவோ ரெத்தனே. 16

அய்யோ அய்யோ வென்பார்க ளெத்தனே
அலரிக்கதறி புலம்புவார்க ளெத்தனே. 17
வெயிலின்சூடு வதைக்குதென்போ ரெத்தனே
வயிறுவெடித்து குளம்பி கிடப்போ ரெத்தனே. 18

கையைத்தலையில் வைத்து அழுவோ ரெத்தனே
கையைக் கழுத்திலமாட்டி அழுவோ ரெத்தனே. 19
காலும் கையும நடுங்கியழுவோ ரெத்தனே
கண்ணுமுழிகள் நட்டுஅழுவோ ரெத்தனே. 20

துடித்துப்பதைத்து கத்துவோர்களெத்தனே
துடித்துத்துடித்து கதறியழுவோ ரெத்தனே. 21
வயிறுமண்டை வெடித்தழுவோ ரெத்தனே
வெடித்துசதைக ளுனுவடிவோ ரெத்தனே. 22

பெரண்டுமிதியிலுருண்டு கிடப்போ ரெத்தனே
பொறுக்கமுடியாமல் துடிப்போ ரெத்தனே. 23
கேடெகேடெ என்பவர்க ளெத்தனே
கேள்விக்கென்ன சொல்வதெனென்போ ரெத்தனே. 24

யாரைப்பார்த்தபோது மழுகைபாடு தான்
யாருமழுகா பேரிராத ஜாயிதான். 25
பெண்டுபிள்ளை புருஷனுறவுமேதுகாண்
பிறியமுள்ள ஜனங்களுறவுமேதுகாண். 26

ஒருவர்க்கொருவர்க்கேது ம்பச்சு கேளுகாண்
ஒருவர்க்கொருவர்க் குதவிடாத வேளைகாண். 27
ஏகமன கூக்குரல்களாகுமே
எங்கெபார்த்தபோது மழுகை சப்தமே. 28

என்னசெய்வோ மிஷ்டரே கைசேதமே
இந்த நாளுவந்து வாச்சே தீருமே. 29

நபிமார்களிடம்போய் ஷபாஅத்தைத் தேடல்.

அதே இராகம்.

ஸகலமுஸ்லிமான மஹ்ஷருளிகள்
ஸகலநபிகளிடமு மொழிந்தழுவாருகள். 1

தப்புக்குகந்தபேர்க ளானநபிகளே
தப்புவேதமொழிகள் சுமந்தபேர்களே. 2

நீங்களல்லாவுக்குப் பிரியமானவர்
நீங்களவனையடுத்துப் பேச வுகந்தவர். 3

எங்கள்பேரில் றப்பு கிருபைசெய்யவே
இன் றுமீட்சிதந்த தாபைநீக்கவே. 4
கேட்டுக்கொடுங்கள் றப்பைகெஞ்சி நபிகளே
கேடுபொஷிக்கி கரிக்கி தீர்த்த தெங்களே. 5

சொல்லுவார்க ளிந்தவேளை எங்களால்
சொல்லிக்கேட்டுக் கெடுக்க முடிய பெரியஹால். 6
எங்கள்ஹாலே நப்ஸிநப்ஸி நப்ஸியா
என் றுசொல்லி யழுகின்றோமே மிகுதியா. 7

போங்களிபுறாஹீமு இடத்தில் ஜல்தியா
போயவரும் அந்தபடியே சொல்லுவார். 8
இன்னமிபுறாஹீமு சொல்லுவாரஹ் ...து
இன்னயிடத்தில் லிருக்கிறார்கள் தடமிது. 9
போங்களவரு செய்யுவா ரீடேறங்கள்
போகுவார்கள் போட்டுப்போட்டுக் கூக்குரல். 10

றஸூலுல்லாவைக்கண்டு ஷபாஅத்துப்பெறுகுதல.

அதே இராகம்.

அஹ்மதா முஹம்மதாயா ஸையதா
அம்ஜதாமு மஜ்ஜதாயா ஸையதா. 1
ஷாபிஹாமு ஷப்பஹாயதல்சறம்
ஸாகிபுல்லாஹில் கபூரிதிர்றகம். 2
என் றுசொல்லி நபியிடத்தில் சேருவார்
ஏங்கியேங்கி அழுது முறைகளிடுகுவார். 3
சங்கடங்கள் தங்கடங்கள சொல்குவார்
சப்தம்மிகுதம்போட்டுக் கெஞ்சி யழுகுவார். 4
இந்த ஹாலைபார்த்து கைறுல் அன்பியா
இங்கெவாங்க ளென் றுசொல்லி ஜல்தியா. 5
சொல்லுவார்களும்மத்தா என் னும்மத்தா
ஸபுறுசெய்யுங்கள் அழுகவேண்டாம் உம்மத்தா. 6
பார்த்து உங்கள் ஹாலைசரல் நடுங்குதே
பதறி மனதுத்துடித்து மிகுதங் கருகுதே. 7
என் றுசொல்லிப் போகுவார்கள் றப்பிடம்
ஏகமான துக்கத்தோடே ஹஸபிடம். 8
அர்றஹ்மா யாரஹீமாவென் றழுகுவார்
அறுஷின்னடியில் செய்து ஸஜதா மொழியுவார். 9
அறுவைஷப்படைத்த வல்லவாயா ஹஸ்பனு
ஹஷுறுநஷுறை வைத்தவாயா றப்பனு. 10

யாகபூரு யாகபூரு யாகபூற்
யாஜவாத யாஜவாத யாஷூக்கூற். 11

மெஹ்றுசெய்து மஹ்ஷறுளிபேரிலே
மீட்சிகொடுத்து மோட்சந்தருவாய் நேரிலே. 12

இன்ன மவரு பாவமெல்லா மழித்துநீ
இரக்க மிகுதன் செய்துகிருபை செய்யிநீ. 13

நீகபூறு நீகரீமு நீறஹீம்
நீ அலீஸூ நீறஊபு நீஹலீம். 14

கிருபைசெய்தே தீரவேண்டாம் றப்பனே
கொடுமைநீக்கி தயவுசெய்நீ ஹஸ்பனே. 15

உதவிகாரு உதவிசெய்தா மீட்சியே
உன்னையன்றி யுதவியாருமில்லையே. 16

இவ்வளவெல்லா மொழிந்து முஃயுமுன்னமே
இரங்கிறஹ்மான் சொல்வதைநீர் கேளுமே. 17

அழுகவேண்டா மழுகவேண்டா மென்ஹபீப்
அறுஷூதுலுங்கிக் கவுந்துபோகும்ஜலத்தீப். 18

சூடுநரகமமந்து போகு மேலததீப்
சூடுபோயி குளுந்துபோகும் ஒஷரீப். 19

தறையைவிட்டும் தலையைத்தூக்கென் தோழரே
தவுலத்தெல்லா முமக்கு சொந்தம் நேசரே. 20

படைத்தனில்லை யாகிலும்மை நேசரே
படைப்பதேது மற்றவஸ்தை நேசரே. 21

தன் துவாவை ஸம்மதத்தி லாக்கினேன்
தன் மனம்போலிய கஹறை நீக்கினேன். 22

தறையைவிட்டுத் தலையை யெடுங்கள் ஷாபிஹூ
தாங்கிகையை யேந்திநிற்பார் நாபிஹூ. 23

கஹறைநீக்கி மெஹ்ரவாளுக் கீய்தவன்
கண்டிபபான கோனுமீஸான் நட்டவன். 24

தட்டுரெண்டு தொங்குமதில் நேசனே
திட்டமாகக் காணும்வரீ வாசனே. 25

நன்மைதின்மை ஒவ்வொருவர் செய்ததை
நன்மையொன்றில் தின்மையொன்றில் வைத்ததை. 26

நிறுத்துநன்மை கனத்தவர்க்குச் சொர்க்கமே
நிறுத்துத்தின்மை கனத்தவர்க்கு நரகமே. 27

என்றுதீர்ப்பு செய்து நல்ல நீதவான்
ஏறிப்பாலம் போகச்சொல்லி யில்ஜினன். 28

பாலமொன்று நரகமுகத்திலாக்குவான்
பாவிநல்லோ ரனைவரையும் மேற்றுவான். 29

கத்திமுனையைக் காணகூர்மையானது
கத்திரீகளுள்ள பாலமானது. 30
காற்றுமிருளும் மிருகமான தானமாம்
கடினமாக ஆடுகின்ற பாலமாம். 31
மட்டமேத்த மெற்க்கந்தூரங் கேளுகாண்
மொத்தமூணு அல்புஸாலு பாருபாண். 32
பாவமிகுந்தோ ரேறும்போது எடையிலே
பாலமறுந்து விழுகுவார்கள் நரகிலே. 33
கத்திரீகள் கத்திரிக்கும் பாவியே
கத்திநரகில் விழுகுவார்கள் சாடியே. 34
நல்லவர்கள் பாலமேறி சொர்க்கத்தை
நடந்துசேர்வா ரெடுத்துசிலரு ஆபத்தை. 35
சிலருமின்னல் போலபோயி சேருவார்
சிலருஜெல்தி சொர்க்கம்போயி ஆளுவார். 36
இக்கரை மைதானிலேற வாகனம்
இருக்கமட்டும் சொர்க்கலோகம் சேகனம். 37
இவைகளேக மூர்க்கமான மிருகமாம்
எடுத்துமவரை சுவர்க்கம்போயி சேர்க்குமாம். 38
இவைகளவர்கள் கொடுத்த குருபானியாம்
எதிருமிருந்து விரஷலாகப் போகுமாம். 39
நல்லவர்கள் சொர்க்க வாழி யாகுவார்
நரகவாழி நரகம் போயி சேருவார். 40
மௌத்தை யறுக்கப்படுகு மிருபேரிடையிலே
முழுதுமோதி விளங்கு துலங்கும் மனதிலே. 41
மரணவிளக்கம் மனதைத்துலக்கும் முடிந்தது
மிகுந்த மஃனபொருளு விளக்கம் பொதிந்தது. 42

முனாஜாத்து.

ஸல்லியா றப்பல் அனுபி வஸ்ஸமா
அலன்னபியில் முஸ்தபா முஸல்லிமா. 1
இல்மூநாலே எங்கள் மனதை வெளிச்சமா
ஆக்குமொழிவாலாக்கு நாவை சுத்தமா. 2
எந்தபாபும் தவறிடாமல் நாவிலே
எணக்கமாக அக்ஷரத்தை ஒட்டிவை. 3
சுத்தமாக குறுஆனை நாங்கள் ஓதநீ
சுத்தமாக்கித் தந்தருள் நீ நாவைநீ. 4
இமாமுகஸ்ஸாலீ மனதைப்போலநீ
ஒளிவாக ஆக்கு எங்கள் மனதை றப்புநீ 5

அபூஷஹ்மா நாவு தொண்டை போலநீ
அழகாக ஆக்கு எங்கள் தொண்டை நாவைநீ. 6

படிப்பைக்கெடுக்கும் ஆபத்தைநீ தட்டிவை
பிடித்தநோயை ஜல்தியாக நீக்கிவை. 7

இன்ஸ் ஜின் ஷைத்தானுனாலே துன்பங்கள்
எங்கள்பேரில் வந்திடாமல் காத்துக்கொள். 8

நோயிபஞ்சம் துக்கம் வந்தணுகாமலே
நாயனே நீகாரு எங்கள் யாபேர்களே. 9

எந்தநாளும் உன்னைநாங்கள் வணங்கவே
உபகாரம்செய்பி விட்டிடாமல் காருவே. 10

நாங்களிருக்கும் காலமெல்லா மிருதமா
நல்ல இரணம் தவுலத்தைத்தா நேமமா. 11

உனக்குப் பொருந்தாவேலைவை ஓர்காலமும்
எங்களாலே ஆபிடாமல் கார்த்திடும். 12

கடைசிபாவம் பொறுத்து ஈமானுடனெனி
கொடுத்தருள்நீ எங்கள்பேரில் மௌத்தைநீ. 13

எங்கள்தாயி தகப்பரும் தாதாக்களும்
இன்னமெங்கள் தாதிமார் நானுக்களும். 14

நன்னிமார் சகோதரும் குல்நேசரும்
நல்லமுமின் முஸ்லிமான்பேர்களும். 15

இத்தாதிபேரும் ஜென்னதுல் பிர்தௌஸுக்குள்
எந்த நாளுமிருக்க நல்லுதவி செய்தருள். 16

ஸக்றத்து தொடுத்து சொர்க்கம் புகுதமட்டிலும்
பிகுருத்துசகல ஜெம்பலத்தைக் கார்த்திடும். 17

இலாஹனுநீன் ஆபியுன் கரமின்சடல்
இவாளு எங்கள் பாவத்தயை அழிவதில். 18

யாரப்பனு யா ஹஸ்பல் யா தல்கறம்
இந்த அஸ்ஹாபை [illegible] ஆஷிக்கும். 19

இன்னமவரின் [illegible] தி நானிக்கு
அஹ்பாபுபாபா நன்ப்பா ஆஜ்தாதுக்கும். 20

அண்ணன் தங்கை அக்றபான் பேருக்கும்
உஸ்தாதுக்கும் ஆமீனை சொல்கின்றோருக்கும். 21

பாவம்பொறுத்து சொர்க்கம் கொடுத்துக் கிருபையால்
பாலிலீங்க ளோடிருக்க செய்ஜலால் 22

ஸல்லிபா ரப்பல் அனுபி [illegible]மா
அலல்[illegible] [illegible]ஸல்பிமா. 23

ஆமீனுமீன் யாரப்பல் ஆலமீன் முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras,

113903